**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 96/2022**

**2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

வா.சா.3 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | சீதாலட்சுமி | தபெ/கபெ |
| ஊர் | | வட்டம் |
| சாதி | | சமயம் |
| வயது | | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 3வது சாட்சி ஆவேன். நான் கிராம நிர்வாக அலுவலராக கே.கே.பள்ளம் குரூப்பில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். பழைய சர்வே எண். 224/10, புதிய சர்வே எண். 224/35, 224/10பி, அதன் உட்பிரிவு புலஎண். 224/10பி1 ஆகிய புலஎண்கள் சம்பந்தமான புலப்பட வரைபடம் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10(1) அடங்கல் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 'அ' பதிவேடு **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிராம கணக்கு **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணுக்குரிய சிட்டா **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**கு.வி:**

கே.கே.பள்ளம் குரூப் கிராம நிர்வாக அலுவலராக எவ்வளவு காலம் பணிபுரிகிறீர்கள் என்றால் 6 மாதங்கள் ஆகும். ஆவணங்களை நிதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு முன்பாக மேற்படி இடத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். சம்பவம் இடம் சம்பந்தமாக என்ன பிரச்சனை உள்ளதாக கிராம உதவியாளரிடம் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் கிராம உதவியாளருக்கு தெரியாது என்றார். கிராம உதவியாளர் கே.கே.பள்ளம் குரூப்பில் சுமார் 5 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார். மேற்படி இடம் தொடர்பாக 2022ம் ஆண்டு மே மாதம் பிரச்சனை ஏற்பட்டு பாதை சம்பந்தமாக வட்டாட்சியா உட்பட வருவாய்துறை அதிகாரிகள் சென்று தாவா இடத்தை பார்வையிட்டு பாதையை தடை ஏதும் செய்யக்கூடாது என வாதியிடம்

சொல்லி சென்ற விபரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரியாது. நானும் கிராம உதவியாளரும் வாதி கேட்டதற்கிணங்க வட்டாட்சியர் உட்பட வருவாய்துறை அதிகாரிகள் சென்று தாவா இடத்தை பார்வையிட்ட விபரம் தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.224/35க்குரிய ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.224/35 கணினிபட்டா எண்.1441 உள்ளதா என்றால் சர்வே எண்.224/35 பட்டா எண். 1794 டிபிடி எண். 2010/1593 நாள் 16.07.2010 ஆக உள்ளது. அதன் விஸ்தீரணம் 6 1/4 செண்ட். கடந்த 2022ம் ஆண்டு வாக்கில் கணினிபட்டா எண்.1441 கிழமேல் 8 அடி தென்வடல் 121.5 விஸ்தீரணம் 972 ச.அடி இருந்ததா என்றால் இல்லை, மேற்கண்ட விபரங்கள் வருவாய் ஆவணங்களில் 2010ம் வருடம் மாற்றப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள புலப்பட நகலில் புல எண். 224/35 என்பது குறிப்பிட்டுக் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் உள்ள கணினி புலப்பட நகலிலும் புல எண். 224/35 என்பது இல்லை என்றால் சரிதான். 224/10ஏ, 1ஏ எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நான் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ள ‘அ’ பதிவேடு ஆவணங்களில் சர்வே எண். 224∴10ஏ, 1ஏ எந்த தேதியில் 224/10லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை. சர்வே எண். 224/10ஏ, 1ஏ எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 6 ஏர்ஸ் சுமார் 15 செண்ட். அது சர்வே எண்.224/35க்கு வடக்கில் உள்ளதா தெற்கில் உள்ளதா என்றால் அதற்குரிய ஆவணங்கள் இல்லை. சர்வே எண். 224/10 ஆனது 224/10பி1, 224/10பி2 என எப்போது பிரிக்கப்பட்டது என்றால் 74/1404 நாள் 04.11. மட்டும் தெளிவாக தெரிகிறது வருடம் 1994 அல்லது 1999 என வருடம் சரியாக புலப்படவில்லை. சர்வே எண்.224/10பி2 விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 ஏர்ஸ் சுமார் 5 செண்ட். 224/10பி1 எவ்வளவு ஏர்ஸ் என்றால் 2 ஏர்ஸ். என்னிடம் காண்பிக்கப்படும் வாத தரப்பு உத்தேச வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாதிக்கு பாத்தியமான காலியிடம் சர்வே எண்.224/10பி1 என குறிப்பிடப்பட்டுள்ளது வருவாய் ஆவணங்கள்படி தவறானது என்றால் சரிதான். சர்வே எண்.224/10பி1, பி2 என்பது சர்வே எண். 224/35க்கு எந்த திசையில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தாவா இடத்தை பார்வையிட்டு அது சம்பந்தமாக தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா இடத்திற்கு கிழக்கில் 10 அடி தென்வடல் பொதுப்பாதை உள்ளதா என்று கேட்டால் நான் அந்த பகுதியை சரியாக

பார்க்கவில்லை. தாவா இடத்திற்கு மேற்கு பக்கம் பொதுவான குவாரி இடம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. தாவா இடமானது பொதுவாக பயன்படுத்தும் பாதை என்பது தெரியுமா என்றால் தெரியாது. வாதி கேட்டதற்கிணங்கவும், நானும் கிராம உதவியாளர் அறிவுறுத்தலின்படியும் வாதிக்கு ஆதரவாக தாவா இடத்திற்கு கிழக்கில் உள்ள தென்வடல் பாதையும் மேற்கில் உள்ள குவாரி இடம் என்பதும், தாவா இடம் பொதுமக்கள் பயன்படுத்தும் இடம் என்பதும் மறைத்து உண்மைக்கும் வருவாய் துறை ஆவணங்களுக்கும் எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 224/35 என்பது புலப்படத்தில் இல்லாத நிலையில் தாவா சொத்தை தெளிவாக அறியவில்லை என்றால் சரிதான். சர்வே 224/10 என்பது 224/10ஏ, 10பி உட்பிரிவு செய்யப்பட்டது போக யார் பெயரில் மீதம் உள்ளது, பட்டா எண் என்ன என்றால் தெரியாது. சர்வே எண். 224/35 புலப்பட நகலில் இல்லை என்றால் சரிதான். அடங்கலில் இருக்கும் புலமானது புலப்படத்தில் இல்லை என்றால் அடங்கலில் தவறாக இருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**